**ம.அ.10.ந.பி.ந.க.எண்.13134/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.545/2014 **பொருள் எண்.01**

**தானப்பத்திரம்**

திரு. எச்.எஸ். சுரேஷ்பாபு மற்றும் திரு. ஆர். சிவகுருநாதன் (G.P.A) பழைய எண்.191, புதிய எண்.8, லேக் வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033, புலியூர் கிராமம், பிளாக் எண்.55, சர்வே எண்.13 என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தினை ஒட்டிய சாலை “சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II”ன் மூலம் 18.28 மீ அகலம் உள்ள சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 9.80மீ நீளம் X 4.57மீ அகலம்= 45.11 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை 10வது மண்டல வார்டு குழு பரிந்துரை செய்து (தீர்மான எண்.1042 நாள்.19.11.2013) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற

1. கட்டட உரிமையாளர்கள் திரு. எச்.எஸ். சுரேஷ்பாபு மற்றும் திரு. ஆர். சிவகுருநாதன் (G.P.A) இவர்களின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 45.11 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.55,000/–ஐ கட்டட உரிமையாளரிடம் “ஆணையர், சென்னை மாநகராட்சி” என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு, அவர்கள் கட்டிட அனுமதி கோரும் பொழுது அவர்களுக்கு உரிய DRC–ஐ சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“14.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.10/2014, நாள்.14.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்:தொ.ப.நி/098/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.546/2014 **பொருள் எண்.02**

**கல்வித்துறை – தொழிற் பயிற்சி நிலையத்தில் வருங்காலத்தில் கூடுதலாக புதிய பாடப்பிரிவுகள் சேர்க்க, நீக்க அல்லது பாடப்பிரிவுகள் மாற்றி அமைத்தல் மற்றும் இதர செயல்கள் ஆகியவற்றினை செயல்படுத்த சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகாரத்தை வழங்க அரசினை கோருவதற்கு அனுமதி**

அரசாணை நிலை எண்.55 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு எஸ்:2துறை நாள்:26.04.1999 நாளிட்ட அரசாணையில் சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் ஆறு பாடப் பிரிவுகளுடன் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் மத்திய அரசின் தேசிய வாழ்வியல் பயிற்சி திட்டத்தின் (NCVT) அங்கீகாரத்தின்படி துவங்கவும், சென்னை மாநகராட்சியில் படிக்கின்ற மாணவர்களில் 80 விழுக்காடும், சென்னை மாநகராட்சியில் பணி செய்யும் பணியாளர்களின் மாணவர்களில் 20 விழுக்காடும் மாணவர்களை சேர்ப்பதற்கும் ஆணை அளித்துள்ளது. இந்த அரசாணையின்படி மண்டலம்–9, கோட்டம்–120, நடிப்பிசை புலவர் கே.ஆர்.இராமசாமி நகர், ஸ்கொயர் பிளாக், லாயிட்ஸ் காலனி, சென்னை – 600 014 என்ற முகவரியில் கீழ்காணும் பாடப் பிரிவுகளுக்கு மத்திய அரசின் தேசிய வாழ்வியல் பயிற்சி திட்டத்தின் (NCVT) அங்கீகாரம் பெற்று தொழிற் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பாடப்பிரிவு | கல்வித்தகுதி | அங்கீகாரம்படி மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 22+22=44 |
| 2. | குழாய் பொருத்துநர் | 8ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 3. | பிட்டர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 5. | மின் பணியாளர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 6. | கம்மியர் மிண்ணுவியல் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| | | மொத்தம் | **254** |

அரசாணை நிலை எண்.88, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு எஸ்:2துறை நாள்:06.05.2010 நாளிட்ட அரசாணையில் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கான மாணவர்கள் சேர்க்கையில் சென்னை மாநகராட்சி பள்ளியில் படித்த மாணவர்களுக்கு மாணவர்களில் 80% மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகளுக்கு 20% என்ற விழுக்காடு முறையை மாற்றி, சென்னை மாநகராட்சி பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கும் மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும், மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்தும், மீதம் காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் பிற பள்ளிகளில் படித்த, சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் இன இட ஒதுக்கீட்டு ஆணைகளைப் பின்பற்றி சேர்ப்பதற்கு ஆணை அளித்துள்ளது. இதன்படி தற்போது பயிற்சியில் மாணவர்கள் சேர்க்கை செய்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

சென்னைமாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடித்து செல்லும் மாணவர்களுக்கு பல முன்னணி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலான தொழிற்சாலைகளில் இருந்து Mechanic Refrigeration and Air conditioning மற்றும் Welder (Gas and Electric) பாடப் பிரிவுகளில் பயிற்சி முடித்த மாணவர்கள் தேவை என கேட்கின்றனர்.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படித்த சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த ஏழை எளிய மாணவர்கள் தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கு மிக அதிக கட்டண தொகை செலுத்த வேண்டி உள்ளதால் கட்டணம் செலுத்தி அதிகமான வேலைவாய்ப்புள்ள இந்த இரண்டு பயிற்சி பாடப் பிரிவுகளில் பயிற்சி பெறுவது கடினமான ஒன்று என்பதாலும், சென்னை பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்கள் எதிர்கால நலன் கருதியும் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தினை விரிவுபடுத்திடும் நோக்கிலும் நல்ல வேலை வாய்ப்பு உள்ள இவ்விரண்டு பாடப்பிரிவுகளும் துவங்க மன்றத்தீர்மானம் (மன்றத் தீர்மான எண். 399/2014 நாள் 31.07.2014) பெறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மானத்தின்படி இரண்டு புதிய பாடப்பிரிவுகள் துவங்க தேவையான நான்கு இளநிலை பயிற்சி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடம் அரசாணை வழங்க கேட்டு அரசுக்கு கடிதம் 10.10.2014–ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலைய பணியாளர்கள் தேர்வு மற்றும் செலவீனம் குறித்த அரசாணை எண்:292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-3) துறை நாள்: 06.08.2004 மற்றும் இவ்வரசாணைக்கு திருத்தம் வழங்கிய அரசு கடிதம் எண்: 36789/MC-3/2007–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 06.11.2008ன் படி கீழ்காணும் திருத்திய ஆணை அளிக்கப்பட்டிருந்தது.

**AMENDMENT**

**"The Corporation of Chennai will fund the entire expenditure of the Industrial Training Institute and to pay Time Scale instead of consolidated pay on contract basis to the staff as per the Government norms from the fund of Chennai Corporation."**

**திருத்தம்**

**" சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது."**

இந்த அரசாணைகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தின் பணியாளர்கள் ஊதியம், பயிற்சி பாடப் பிரிவுகளுக்குத் தேவையான செய்முறை கருவிகள் மற்றும் உபகரணங்கள், நாள்தோறும் செய்முறை பயிற்சிக்கு தேவையான நுகர்பொருட்கள் கொள்முதல் செய்து பயன்படுத்துவது ஆகும். இரண்டு ஆண்டுகளாக வருடத்திற்கு ஒரு முறை ஒரு செட் விலையில்லா சீருடை பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது மற்றும் பயிற்சி மாணவர்களுக்கு 2012–2013ம் கல்வி ஆண்டு முதல் மாமன்ற தீர்மானஎண்.350/2012, நாள்.24/08/2012ன்படி முற்றிலும் கட்டணம் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் ஏழை, எளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் இலவச பேருந்து பயணத்திற்கு NCVT அங்கீகாரத்தின்படி சேர்க்கை செய்யும் மாணவர்களுக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்து பயிற்சியாளர்கள் வீட்டில் இருந்து தொழிற்பயிற்சி நிலையத்திற்கு கட்டணம் இன்றி சென்று வர மன்றத்தின் ஒப்புதலின்படி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டு அரசாணை பெறப்பட்டு (அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2014) 2014–ம் கல்வி ஆண்டு முதல் மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

அரசு கடிதம் எண்:36789/MC-3/2007–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:06.11.2008ன் படி சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மேலே சொல்லப்பட்ட அனைத்து செயல்பாடுகளுக்கான நிதி அனைத்தும் மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் வரும் காலத்தில் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் பணியாளர் பணியிடம் தோற்றுவிப்பது தவிர்த்து கூடுதலாக புதிய பாடப்பிரிவுகள் சேர்க்க, நீக்க அல்லது பாடப்பிரிவுகள் மாற்றி அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசிற்கு குறிப்பிடாமல் மன்றத்தின் அதிகாரத்துக்குட்பட்டு செயல்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்திற்கான நிதி அனைத்தும் மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் வருங்காலங்களில் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் பணியாளர் பணியிடம் தோற்றுவிப்பது தவிர்த்து கூடுதலாக புதிய பாடப்பிரிவுகள் சேர்க்க, நீக்க அல்லது பாடப்பிரிவுகள் மாற்றி அமைத்தல் மற்றும் இதர செயல்பாடுகளுக்கும் அரசுக்கு குறிப்பிடாமல் சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதியுடன் செயல்படுத்திக் கொள்ள மன்றத்திற்கு அதிகாரத்தை வழங்க கேட்டு அரசின் ஆணை பெற நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"15.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.33/2014, நாள்15.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/916/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.547/2014 **பொருள் எண்.03**

**<u>படிகள் – அகவிலைப்படி – 01.07.2014 முதல் அகவிலைப்படி 7 சதவிகிதம் உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி</u>**

10.10.2014 நாளிட்ட நிதி (படிகள்) துறை அரசாணை எண்.245ல், ஜுலை 2014 முதல் அகவிலைப்படி 100 விழுக்காடிலிருந்து 107 விழுக்காடு உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.07.2014 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும், ஜுலை முதல் செப்டம்பர் வரை அகவிலைப்படி நிலுவை தொகை உடனடியாக வழங்கவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடியத் தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும் என்றும் அதுவே 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வரசாணையில், தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், சில்லரை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்டட அகவிலைப்படி பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணியுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் / எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படி உயர்வினால் சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 14.68 கோடியாகும் எனவும், நடப்பு நிதியாண்டில் ரூ. 7.55 கோடி கூடுதல் செலவு ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, ஜுலை 2014 முதல் அகவிலைப்படி 100 விழுக்காடிலிருந்து 107 விழுக்காடு உயர்த்தி வழங்க வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.245, நிதி (படிகள்) துறை, நாள்.10.10.2014ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.440/2014, நாள்.20.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/285/1994</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.548/2014 **பொருள் எண்.04**

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை – அருணாச்சல ஈஸ்வரன் கோயில் தெரு – தண்டையார்பேட்டை கிராமம், புல எண். 3967/1 பாகத்திலுள்ள நிலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்வதற்கு அனுமதி</u>**

கோட்டை–தண்டையார்பேட்டை வட்டம், தண்டையார்பேட்டை கிராமம், புல எண்,3967/1, பாகத்திலுள்ள 5 மனை 505 சதுர அடி பரப்பளவு கொண்ட குடிசைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி தனி நிலத்தினை அருணாச்சல ஈஸ்வரன் கோயில் தெரு திட்டப்பணிக்காக மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் கிரய அடிப்படையில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு அரசின் ஆணையினை கோரலாம் என தனி அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.641/94, நாள்.18.03.1994–ல் முடிவெடுக்கப்பட்டு அரசுக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டது. அரசு இதனை ஏற்று இந்நிலத்தினை மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் கிரய அடிப்படையில் நிலக்கிரயம் பெற்று கொண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு அரசாணை எண். 224, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 20.09.1996ன்படி அரசு உத்தரவு பிறப்பித்தது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலங்களில் குடிசைகள் மூலமாக ஏற்கனவே ஆக்கிரமிப்புகள் செய்து பல ஆண்டுகளாக இருக்குமேயானால், அந்த நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு தேவையெனில், அவ்வாரியத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என்ற சலுகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு நில மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என பொதுவான ஆணையினை அரசு பிறப்பித்துள்ளது.

மேற்கண்ட நிலம் சாலைக்காக ஒதுக்கப்பட்ட சென்னை மாநகராட்சி தனி நிலம் என்பதாலும் இது சம்மந்தமாக மற்றொரு நிகழ்வில் நில மாற்றம் செய்ய சந்தைவிலை கோரவும் அரசாணை பிறப்பித்துள்ளதாலும், இந்நிகழ்விற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு அளிப்பதற்கு பதிலாக சந்தை விலையின் மதிப்பின் அடிப்படையில் நிலமாற்றம் செய்வதற்கு மன்ற தீர்மானம் எண்.120/2007, நாள்.25.04.2007ஆம் ஆண்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உரிய அரசாணை வேண்டி 03.07.2007ஆம் ஆண்டில் இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு இதன் பொருட்டு நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டன.

அரசு துணைச் செயலாளர் ந.நி.ம.கு.வ.துறை அவர்களின் கடித ந.க.எண்.23016/ மா.ந.1/2012–1, நாள்.11.10.2012, 22.08.2013 (ம) 23.12.2013ஆம் நாளிட்ட அரசு துணை செயலாளர், ந.நி.ம.கு.வ.துறை அவர்களின் கடிதத்தில் 17.09.2012–ஆம் நாளிட்ட சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையரின் குறிப்புரையின் மீது தங்களது அறிக்கையினை அனுப்புமாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டு அதன் நகலினை இத்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மேலும், 22.01.2014ஆம் நாளிட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைவர், அரசு செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தண்டையார் பேட்டை புல எண்.3967/1–ல் கண்ட 5 மனை 505 ச.அடி பரப்புள்ள திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டதாகவும், மேலும் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலங்களில் குடிசைகள் மூலமாக ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்து பல ஆண்டுகளாக இருக்குமேயானால் அந்நிலம் குடிசை மாற்று வாரியத்திற்கு தேவையெனில் மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என சலுகை விலை அடிப்படையில் நில கிரயம் பெற்றுக்கொண்டு நிலமாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என உத்தரவிடப்பட்டுள்ளதால், அதன்படி மேற்படி நிலத்திற்கு அரசாணையின்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் 5 மனை 505 ச.அடி நிலத்திற்கு கிரயத்தொகையாக ரூ.52,104/–ஐ 21.02.2006 அன்று சென்னை மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளதாலும், மேலும் இத்திட்டப்பகுதியில் ஏழை எளிய மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குறைந்த அளவிலேயே மனை கிரயம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி நிலத்திற்கு சந்தை விலை மதிப்பில் கிரய தொகை வழங்க இயலாது என வாரியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தற்போது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சார்பில் அனுப்பப்பட்ட குறிப்புரையின் மீது தங்களது அறிக்கையினை அரசுக்கு உடன் அனுப்பிவைக்குமாறு 03.03.2014–ஆம் நாளிட்ட அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடித ந.க.எண்.என்.23016/மா.ந.1/2012–1, நாளிட்ட அரசு செயலாளரின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை எண்.68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.15.03.1996–ல் பிறப்பித்த அரசாணையில் தேனாம்பேட்டை வன்னியபுரத்தில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சந்தை விலையினை பெற்றுக்கொண்டு நிலமாற்றம் செய்வதற்கு உத்தரவு அளித்துள்ளது. ஆனால் அருணாசல ஈஸ்வரன் கோயில் தெரு திட்டப்பகுதியிலுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய ஒரு மனைக்கு ரூ.10,000/– என விலை நிர்ணயம் செய்து. அரசாணை எண்.224, நாள்.20.09.1996 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதால் கோப்பினை கூர்ந்தாய்வு செய்ததில் சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு சந்தைவிலை மதிப்பு கோரி மன்றத் தீர்மான எண்.120/2007, நாள்.25.04.2007ன்படி மன்ற தீர்மானம் பெறப்பட்டது.

மேலும், குடிசைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் குடிசை மாற்று வாரியத்தால் திட்டம் நிறைவேற்றியிருந்தால் அந்நிலங்களுக்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என்ற கிரய அடிப்படையில் கிரயத்தொகை பெற்று கொண்டு வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய ஏற்கனவே, அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.02.1997ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

எனவே,

1. தண்டையார்பேட்டை கிராமம் புல எண்.3967/1 பாகத்திலுள்ள 5 மனை 505 ச. அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் வாரியத்தால் திட்டம் நிறைவேற்றப்பட்டு எழை எளிய மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.02.1997ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என நிலக்கிரயம் நிர்ணயித்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கும்,
2. சந்தை விலை மதிப்பு கோரி பெறப்பட்ட தீர்மானம் எண்.120/2007, நாள்.25.04.2007ஆம் நாளிட்ட மன்ற தீர்மானத்தை ரத்து செய்வதற்கும்,

<u>நிபந்தனைகள்</u>

1. இத்திட்டப்பகுதியிலுள்ள சாலைகள், பொதுகழிப்பிட நிலங்கள் மற்றும் திறந்த வெளிநிலங்கள் (பூங்கா மற்றும் விளையாட்டுதிடல்) போன்றவைகளை தானபத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்க வேண்டும்.
2. இத்திட்டப்பகுதியிலுள்ள ஏற்கனவே சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் சாலைகள், மருத்துவமனைகள், பொதுக்கழிப்பிடங்கள் பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கும் மற்றும் நிபந்தனைகளுக்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.439/2014, நாள்.20.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.வ.அ.ந.க.எண்.இ1/7264/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 7/10/2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.549/2014 **பொருள் எண்.05**

**மதிப்பீடு – மண்டலம்–2, வார்டு–18ல் சி.பி.சி.எல் மனை பிரிவில் உள்ள எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணி 2014 –2015ஆம் ஆண்டிற்கான மூலதன நிதி – ஏற்கனவே பணி மேற்கண்ட ஒப்பந்ததாரர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார். மீதமுள்ள பணிகளுக்கு 2013–2014 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ்குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பணியின் பெயர்

| வ. எண். | வார்டு எண். | பணியின் விவரம் | நீளம் மீ. | பரப்பளவு ச. மீ. | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | சி.பி.சி.எல் மனை பிரிவில் உள்ள எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணி | 25.30 | 307 | 1,46,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | 2012–13 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண். 62 |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | மண்டலம்.2 |
| 4. | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பெறப்பட்டது |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி | : | தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் செயல்முறை ஆணை எண்.005 நாள்18.09.2014. |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013 –2014 (வடக்கு மண்டலம்) |
| 7. | மதிப்பீட்டின் தொகை | | **ரூ. 1,46,,00,000.00/–** |
| | அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 12583205.13 |
| | ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 1258320.51 |
| | இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 314580.13 |
| | ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 248062.18 |
| | உ) மின்சாரம் / குடிநீர் கழிவுநீர் போன்ற இணைப்புகளுக்கு மற்ற பிற இனங்கள் (தரக்கட்டுப்பாடு) | : | ரூ. 70000.00 |
| | ஊ) தொழிலாளர் நல நிதி | : | ரூ. 125832.05 |
| | **மொத்தம்** | : | **ரூ. 1,46,,00,000.00/–** |
| 8. | மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | : | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு | : | கடைக்கால் – ரூ.3895/ச.மீ<br>தரைத்தளம் – ரூ.13085/ச.மீ |
| 10. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 11. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மானம் எண் மற்றும் தேதி | : | பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது ? | : | ஜூன் –2013ல் 5% சதவீத பணிகள் முடிக்கப்பட்டது.ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 13. | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| அ) | வரவு செலவு ஒதுக்கீடு | : | – |
| ஆ) | மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | – |
| இ) | மீதம் உள்ள நிதி (அ – ஆ) | : | – |
| ஈ) | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 1,46,00,000/– |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.– **1,46,00,000/–**(ரூபாய் ஒரு கோடி நாற்பத்து ஆறு இலட்சம் மட்டும்)க்கான மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி **1919**ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.39/14, நாள்.16.10.2014ன்படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.10.2014 அன்று தீர்மான எண். 435/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“20.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.442/2014, நாள்.20.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>வ.வ.அ.ந.க.எண்.இ1/7263/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.550/2014 **பொருள் எண்.06**

**<u>மதிப்பீடு – மண்டலம்–4, வார்டு–41ல் காரனேஷன் நகர் சென்னை நடுநிலைப் பள்ளியில் (4+4+4) வகுப்பறைகள், மாடிப்படி அறை மற்றும் கழிவறைகள் கட்டும் பணி 2014 –2015 ஆம் ஆண்டிற்கான மூலதன நிதியில் ஏற்கனவே பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் கருப்புபட்டியலில் சேர்க்கப்பட்டதால் மீதமுள்ள பணிகளுக்கு 2013–2014 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ.1,18,00,000/–க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி.</u>**

1. பணியின் பெயர்

| வ. எண். | வார்டு எண். | பணியின் விவரம் | நீளம் மீ. | பரப்பளவு ச. மீ. | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 41 | காரனேஷன் நகரில் (4+4+4) வகுப்பறைகள், மாடிப்படி அறை மற்றும் கழிவறைகள் கட்டும் பணி | 19.45 + 10.02 | 271 | 1,18,00,000/– |

2. பரிந்துரை செய்தவரின் விவரம் : இணை ஆணையர் (கல்வி)
3. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : கல்வி
4. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி : பெறப்பட்டது
5. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி : தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.T.S.No.006/2014-15, நாள்18.09.2014
6. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது : 2013 –2014 (வடக்கு மண்டலம்)
7. மதிப்பீட்டின் தொகை
   - அ) பணி செலவினம் மட்டும் : ரூ. 1,01,53,086.69
   - ஆ) மேலான மேற்பார்வை செலவு : ரூ. 10,15,308.67
   - இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 2,53,827.17
   - ஈ) மற்றைய எதிர்பாரா செலவு : ரூ. 2,06,246.60
   - உ) மின்சாரம் / குடிநீர் கழிவுநீர் போன்ற இணைப்புகளுக்கு மற்ற பிற இனங்கள் (துரக்கட்டுப்பாடு) : ரூ. 70,000.00
   - ஊ) தொழிலாளர் நல நிதி : ரூ. 1,01,530.87

   **மொத்தம் : ரூ. 1,18,00,000.00/–**
8. மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் : பொருந்தாது
9. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு : கடைக்கால் – ரூ.4971/ச.மீ<br>தரைத்தளம் – ரூ.9480/ச.மீ<br>முதல்தளம் – ரூ.9570/ச.மீ<br>இரண்டாம் தளம்– ரூ.9565/ச.மீ
10. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? : ஆம்
11. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மானம் எண் மற்றும் தேதி : பின்னர் பெறப்படும்
12. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது ? : டிசம்பர்–2013ல் 5சதவீத பணிகள் முடிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| **13.** | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| அ) | வரவு செலவு ஒதுக்கீடு | : | **ரூ.60,00,00,000/–** |
| ஆ) | மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | **ரூ.6,34,74,460/–** |
| இ) | மீதம் உள்ள நிதி (அ – ஆ) | : | **ரூ.53,65,25,540/–** |
| ஈ) | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | **ரூ. 1,18,00,000/–** |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.**1,18,00,000/–** (ரூபாய் ஒரு கோடியே பதினெட்டு இலட்சம் மட்டும்)க்கான மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி **1919**ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி**78**(பி)ன்படி நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**15.10.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.**32/2014**, நாள்**15.10.2014**–ன்படி இதற்கு வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"**17.10.2014** அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.10.2014** அன்று தீர்மான எண். **436/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"**20.10.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**443/2014**, நாள்.**20.10.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.10.ந.க.எண்.அ2/13068/06/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 10–10–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.551/2014 **பொருள் எண்.07**

**ஒப்பம் 2013–2014 பணிகள் மண்டலம்–10, பகுதி–30, வார்டு –142ல் SDBC 40mm பேவர் இயந்திரம் மூலமாக தார் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டு திருவாளர். எஸ்.பி. பில்டர்ஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. தார் சாலைக்கு பதிலாக சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்க தார் சாலைக்கு பெறப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–10, பகுதி–30 வார்டு-142ல் பிராமின்லைன், ராமானுஜம், தெரு, பாரதியார்தெரு, நாராயணசாமி தெரு, நாராயணசாமி 1வது தெரு, நாராயணசாமி 2வது தெரு, ராமசாமி தெரு, பாலகிருஷ்னண் தெரு, ராமபுரம் ராமசாமி தெரு, தனசேகரன் தெரு, கருணாகரன் தெரு, ராஜகோபால் தெரு, சின்னம்மால் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, சேம்படா தெரு ஆகியவற்றிற்கு SDBC 40mm பேவர் இயந்திரம் மூலமாக தார் சாலை அமைக்கும் பணிக்காக ஒப்பம் கோரப்பட்டது (–)2.15% குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்.எஸ்.பி.பில்டர்ஸ் அவர்களுக்கு உத்தரவின்படி பணி ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் மேற்படி தெருக்களில் உள்ள பொது மக்கள் இந்த தெருக்கள் அதிக போக்குவரத்தால் அடிக்கடி சேதமடைவதாலும், இந்த இடத்தின் முக்கியத்துவத்தைத் கருத்தில் கொண்டும் தார்ச்சாலைக்கு பதிலாக சிமெண்ட் கான்கீரிட் சாலையாக மாற்றுமாறு கோரிக்கை வைத்துள்ளதாகவும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அவ்விடத்தில் உள்ள பொது மக்களின் வேண்டுகோளின்படி, தார்சாலைக்கு பதிலாக சிமெண்ட் கான்கீரிட் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்

எனவே,

1) 25.2.2014 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண். 202/14ல், வரிசை எண். 102ல் குறிப்பிடப்பட்ட 37 சாலைகளில் 22 சாலைகள் தவிர்த்து மீதமுள்ள 15 சாலைகள் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைப்பதற்கு மேற்குறிப்பிட்டுள்ள மன்றத் தீர்மானத்தில் உரிய திருத்தம் மேற்கொள்வதற்கும்,
2) ஒப்பந்ததாரான திரு.எஸ்.பி. பில்டர்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையை ரத்து செய்யவும்,

மேற்குறிப்பிட்டுள்ள 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.10.2014 அன்று தீர்மான எண். 437/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“20.10.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.441/2014, நாள்.20.10.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.9.ந.க.எண்.WDC09/2957/2012</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 16.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.552/2014 **பொருள் எண்.08**

**<u>தானபத்திரம்</u>**

திரு. ஆர்.எம்.தியாகராஜன், கதவு எண்.பு.எண்.129, ப.எண்.176, வெங்கடாசலம் முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை–14 என்ற இடத்திற்கு கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–9ல் விண்ணப்பித்துள்ளார். அதில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைபடத்தின்படி (D.D.P) மேற்படி இடத்தின் முன் பகுதியில் வெங்கடாசலம் முதலி தெருவில் 12.20 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுபடுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணபதாரரின் மனையின் 10.97மீட்டர் முன்பக்கத்தில் நிலத்திற்கு அகலம் 2 மீட்டர் அதாவது 21.94 சதுர மீட்டர் பரப்பு இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். நிலத்தின் உரிமையாளர் திரு.ஆர்.எம்.தியாகராஜன் அவர்கள் மேற்படி இடத்தினை (மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண்.23, R.S.No.1100/19 Part) வழங்க தானபத்திரம் அளித்துள்ளார்.

மேலும், தானபத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி மேற்படி இடத்தினை பெற்றுக் கொள்ள வார்டு குழுவின் பரிந்துரை (வார்டு குழு தீர்மானஎண்.658 நாள்.21.06.2012ன்படி) பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. வார்டு–119, வெங்கடாசலம் முதலி தெருவில் R.S.No.1100/19 Part, பிளாக் எண்.23, மயிலாப்பூர் கிராமத்தில் 21.94 ச.மீ இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.96,000/– (ரூபாய் தொன்னூற்றாறாயிரம் மட்டும்) மனுதாரரிடம் பெற்றுக் கொள்ளவும்,
3. கட்டிட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண்.11/2014–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்1/4016/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.553/2014 **பொருள் எண்.09**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர். M. அவ்வையார், மருத்துவ அலுவலர் தண்டையார் பேட்டை மண்டலம் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக தஞ்சாவூர் நகராட்சியில் 28.11.1988ல் பணியில் சேர்ந்து பின்னர் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் செய்யப்பட்டு31.09.1989 முதல் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து வருகிறார்.. இவருடைய பிறந்த தேதி 12.10.1956 வயது முதிர்வு ஓய்வு நாள் 31.10.2014.

| | | |
|---|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | மன்ற தீர்மான எண் 198 நாள் 21.05.2002ன் படி 28.11.1988 முதல் பணிவரண்முறைபடுத்தப்பட்டுள்ளது. | மன்ற தீர்மான எண் 564 நாள் 29.10.2003ன் படி 28.11.90 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. |

டாக்டர். M. அவ்வையார் மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 08.10.2014 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது.

தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.10.2014 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு–2 என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே டாக்டர்.M.அவ்வையார், மருத்துவ அலுவலர் அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவரை 31.10.2014 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்1/4112/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.554/2014 **பொருள் எண்.10**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர். S. ஹேமலதா, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 12.04.1984ல் பணியில் சேர்ந்து தற்போது துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக 1.5.2012 முதல் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 23.11.1956 வயது முதிர்வு ஓய்வு நாள் 30.11.2014.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிக்காண் பருவம் முடித்துள்ளார்.

| பணியாற்றிய பதவி | பணியில் சேர்ந்த தேதி | பணி வரன்முறை செய்யப்பட்ட தேதி | தகுதி காண் பருவம் முடிக்கப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | 12.04.1984 | மன்ற தீர்மான எண் 1251 நாள் 17.07.1992ன் படி 12.04.1984 முதல் பணிவரண் முறைபடுத் தப்பட்டுள்ளது. | மன்ற தீர்மான எண் 1251 நாள் 17.07.1992ன் படி 18.07.1986 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 2. மண்டல அலுவலர் | 21.01.2008 | மன்ற தீர்மான எண் 5/09 நாள் 27.01.09 ன் படி 21.01.2008 முதல் பணிவரன் முறைபடுத் தப்பட்டுள்ளது | |
| 3. மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் | 19.09.2011 | நியமனக்குழு தீர்மான எண் 284/2012 நாள் 24.11.2012 ன்படி 19.09.2011 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. | |
| 4. துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் | 01.05.2012 | நியமனக்குழு தீர்மான எண் 258/2013 நாள் 23.12.2013 ன்படி 01.05.2012 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. | |

டாக்டர். S. ஹேமலதா, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 15.10.2014 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது.

தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 30.11.2014 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

பெருமாள்பேட்டை மண்டலத்தில் தனியர் பணிபுரிந்த 2008–2009ஆம் ஆண்டு காலத்தில் தனியர் மீது தணிக்கை தடைகள் பத்திகள் 27(அ) மற்றும் 28(ஆ) நிலுவை இருப்பதாக சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் அறிக்கை அளித்துள்ளார்.

மேற்கண்ட தணிக்கை தடை பத்தி 27(அ) மற்றும் 28(ஆ)க்கு பொறுப்பான திருமதி.கே.நிர்மலா செவிலியர் அவர்களை சென்னை மாநகராட்சி விழிப்பு ஆய்வாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்ட தொகையான ரூபாய் ரூ 1,50,400/–லிருந்து ரூ 10,000/– 10.07.2010 அன்றும் ரூ10,000/– 12.07.2010 அன்று திருமதி. எம். நிர்மலா செவிலியர் அவர்களால் கட்டப்பட்டுள்ளது. மீதம் நிலுவை தொகை ரூ 1,30,400/– உள்ளது.

மேற்கண்ட பத்திகளை நீக்கம் செய்ய துறை வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு குறிப்பு வைக்கப்பட்டுள்ளது. நகல் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியரின் பதவி வகுப்பு 1பி என்பதால் தனியரைபணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே டாக்டர் . S. ஹேமலதா, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் மேற்கண்ட தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை திருமதி.எம்.நிர்மலா செவிலியர் கட்ட தவறும் பட்சத்தில் தனியரே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், இது தவிர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு நேர்வு செய்யப்படாத முன்பணம் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியில்ருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தியும் தனியரை 30.11.2014 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண். சி2/4305 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.555/2014 பொருள் எண்.11

**சுகாதாரத்துறையில் ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் களுக்கான ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியிடங்கள் – ஆண்–74, பெண்–74,ஆக மொத்தம் 148 ஆகும். அதில் தற்போது காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை, ஆண்–55, பெண்–27 ஆக மொத்தம் 82 பணியிடங்கள் ஆகும்.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிகளின் விதிகள் 1998ன்படி நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் 4800–10000+300த.ஊ. இப்பதவி நான்காம் வகுப்பை சாா்ந்ததாகும். இன சுழற்சி முறை பின்பற்றப்பட்டு அதற்கான காலிப்பணியிடம் நிரப்பப்பட வேண்டும். தற்பொழுது உள்ள இப்பதவிக்கான பணி விதிகள் மற்றும் கல்வி தகுதியின் விவரம்.

**பணிவிதிகன் 1998–ன்படி நடைமுறையில் உள்ளது**

| பதவியின் பெயர் | நியமன முறை | | நிர்ணயிக்கப்படும் கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் | நேரடி நியமனம் மூலம் | 1 | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் must pass the Indian Army III class English certificate. | இப்பதவி 1998 வரைவுதுணை விதிகளில் உள்ளது போல் 2009 துணை விதிகளில் சேர்க்கப்பட வேண்டும். |
| | | 2 | உதவி செவிலியர் பணியாளர் (Nursing - Assistant Course) பயிற்சியில் தேர்ச்சி, அரசால் அங்கீகரிப்பட்ட பிற நிறுவனத்தில் பயின்றிருக்க வேண்டும். | |

சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் உதவி செவிலியர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி பெற்றவர்களுக்கு இது சுயநிதி திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பயிற்சி என்பதால் அரசு துறையில் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தாலும் சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் உதவி செவிலியர் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து சென்னை மாநகராட்சியில் பணி நியமனம் வழங்க கோரப்படுகிறது. இதன் அடிப்படையில் தற்பொழுதுள்ள பணிவிதிகளில் கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொண்டால் சென்னை மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனையில் உதவி செவிலியர் பயிற்சி பெற்றவர்களும் இப்பதவியில் பணிநியமனம் செய்யலாம்.

எனவே, ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் பதவிக்கான பணி நியமன விதிகளை கீழ்கண்டவாறு திருத்தம் செய்ய முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

**தற்பொழுது திருத்தம் செய்ய வேண்டிய இப்பதவிக்கான பணிவிதிகள்**

| பதவியின் பெயர் | நியமன முறை | | நிர்ணயிக்கப்படும் கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் | நேரடி நியமனம் மூலம் | 1 | 8ம் வகுப்பு தேர்ச்சி | இப்பதவி 1998 வரைவுதுணை விதிகளில் உள்ளது போல் 2009 துணை விதிகளில் சேர்க்கப்பட வேண்டும். |
| | | 2 | அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உதவி செவிலி பணியாளர் (Nursing Assistant Course) பயிற்சியில் தேர்ச்சி, சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை | |

மேற்குறிப்பிட்ட வகுப்பு 3 மற்றும் 4 க்கான பணியிடங்களின் துணை விதிகளில் ஆண்/பெண் இரண சிகிச்சையாளர் பதவிக்கு மேற்கண்டவாறு நியமன முறை மற்றும் கல்வித் தகுதிக்கான பணி விதிகளை திருத்தம் மேற்கொள்ள நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 42061 / 2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.556/2014 **பொருள் எண்.12**

**<u>பணியமைப்பு</u>**

ஆணையர், சென்னை மாநகர காவல் துறை, சென்னை–7 அவர்களின் ஆணை, ஆர்.சி.எண்.பணி.I(2)/447/3069/2014, சி.பி.ஓ. எண்.2706/2014, நாள்: 25.09.2014ன்படி, திரு.ஆர்.வேதரத்தினம், காவல் துறை உதவி ஆணையர், துறைமுக சரகம், சென்னை மாநகர காவல் அவர்கள், சென்னை மாநகராட்சியில், விழிப்பு குழுமத்தில், விழிப்பு அலுவலர் ஆக அயற்பணியில் 08.10.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2163/2014</u>**
**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 09.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.557/2014 **பொருள் எண்.13**

**<u>மதிப்பீடு</u>**

மண்டலம்–8, வார்டு–107ல் பச்சையப்பன் கல்லூரி, விடுதி சாலை, பச்சையப்பன் கல்லூரி விளையாட்டு மைதானம் மற்றும் வெங்கடாசலபதி தெருவில் ஓசான் குளம் முதல் கூவம் ஆறு வரை 600மிமீ க்கு 750மிமீ கால்வாயை இடித்து விட்டு 900மிமீ க்கு 1750மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மழைநீர் வடிகால்வாய் மீண்டும் கட்டும் பணி 2013–2014 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்ட ரூ.1,32,36,000/– மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78 ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 439/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.446/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பா.து.ந.க.எண்.பி3/2220/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.558/2014 **பொருள் எண்.14**

**பாலங்கள் துறை – மண்டலம் –9 மற்றும் 10, வார்டு – 110 மற்றும் 134 ல் உள்ள கோடம்பாக்கம் மேம்பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless steel) கைப்பிடிகள் அமைக்கும் பணி – ரூ.1,23,20,000/–க்கு மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் –9 மற்றும் 10, வார்டு – 110 மற்றும் 134 ல் உள்ள கோடம்பாக்கம் மேம்பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless steel) கைப் பிடிகள் அமைக்கும் பணி |
| 2 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | பாலங்கள் துறை |
| 3 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பாலங்கள் துறை |
| 4 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரிசெயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | தலைமை பொறியாளர்(பொது) நாள்.16.10.2014, 26/2014/15 |
| 5 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டது | 2014 – 2015 |
| 6 | மதிப்பீட்டின் தொகை | |
| அ | பணி செலவினம் மட்டும் | ரூ.1,05,30,000.00 |
| ஆ | மேற்பார்வை செலவினம் 10% | ரூ. 10,53,000.00 |
| இ | சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | ரூ. 2,63,250.00 |
| ஈ | தரக்கட்டுபாடு 1 % | ரூ. 1,05,300.00 |
| உ | தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 % | ரூ. 1,05,300.00 |
| ஊ | எதிர்பாரா செலவினம் 2.5% | ரூ. 2,63,150.00 |
| | மொத்தம் | ரூ.1,23,20,000.00 |
| 7 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | – |
| 8 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| 9 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |
| 10 | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| அ | வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2014 – 2015 | ரூ. 25,00,00,000/– |
| ஆ | மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். |
| இ | மீதம் உள்ள நிதி (அ–ஆ) | |
| ஈ | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.1,23,20,000/– |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,23,20,000/— மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 440/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.447/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பா.து.ந.க.எண்.பி3/2219/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.559/2014 **பொருள் எண்.15**

**பாலங்கள் துறை – மண்டலம் –13, வார்டு – 172ல் அடையாறு ஆறு குறுக்கே அமைந்துள்ள கோட்டூர்புரம் பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless steel) கைப்பிடிகள் அமைக்கும் பணி – ரூ.1,75,96,000/–க்கு மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் –13, வார்டு – 172ல் அடையாறு ஆறு குறுக்கே அமைந்துள்ள கோட்டூர்புரம் பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless steel) கைப்பிடிகள் அமைக்கும் பணி |
| 2 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | பாலங்கள் துறை |
| 3 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பாலங்கள் துறை |
| 4 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரிசெயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | தலைமை பொறியாளர்(பொது) நாள்.16.10.2014, 27/2014/15 |
| 5 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டது | 2014 – 2015 |
| 6 | மதிப்பீட்டின் தொகை | |
| அ | பணி செலவினம் மட்டும் | ரூ. 1,50,40,000.00 |
| ஆ | மேற்பார்வை செலவினம் 10% | ரூ. 15,04,000.00 |
| இ | சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | ரூ. 3,76,000.00 |
| ஈ | தரக்கட்டுபாடு 1 % | ரூ. 1,50,400.00 |
| உ | தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 % | ரூ. 1,50,400.00 |
| ஊ | எதிர்பாரா செலவினம் 2.5% | ரூ. 3,75,200.00 |
| | மொத்தம் | ரூ. 1,75,96,000.00 |
| 7 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | – |
| 8 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| 9 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |
| 10 | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| அ | வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2014 – 2015 | ரூ. 25,00,00,000/– |
| ஆ | மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். |
| இ | மீதம் உள்ள நிதி (அ–ஆ) | |
| ஈ | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.1,75,96,000/– |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,75,96,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 441/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.448/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/ 1834 /2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.560/2014 **பொருள் எண்.16**

**கடன் மற்றும் மான்யம் – 10000 சாலைத் திட்டப் பணிகளுக்கு டுபிட்கோ நிதி நிறுவனம் மூலம் MIDF நிதியின் கீழ் கடன் பெறுவதற்கு – டுபிட்கோ நிதி நிறுவன படிவத்தில் உள்ளபடி மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சியில் 10000 சாலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பணிகளுக்காக திட்ட மதிப்பீட்டில் ரூ.86556.00 லட்சத்தில் 50 விழுக்காடு ரூ.43278.00 லட்சம் தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) M.I.D.F. நிதியின்கீழ் ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 15 ஆண்டு காலம் திருப்பி செலுத்தக்கூடிய கடன் வழங்க டுபிட்கோ நிறுவன கடித எண்.TUFIDCO/MIDF/AM(S)/1949, நாள்.14.10.2014ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கடனை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ள மாதிரி படிவத்தில் உள்ளபடி

## Format for Council resolution (As prescribed by TUFIDCO)

1. Resolved that the Council of Corporation of Chennai is authorizing the Commissioner to borrow the loan of **Rs.43278.00** lakhs under the MIDF for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO.

| Sl.No | Name of the Project | Estimated Cost (Rs. in lakhs) | MIDF Loan (Rs. in lakhs) |
|---|---|---|---|
| 1 | Improvement of 5146 BT Roads for a length of 810.22 Kms | 74866.00 | 37433.00 |
| 2 | Improvement of 796 Cement Concrete Roads for a length of 169.43 Kms | 11690.00 | 5845.00 |
| | **TOTAL** | **86556.00** | **43278.00** |

2. Further resolved to authorize the Commissioner to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of Corporation of Chennai on the documents to be executed with TUFIDCO on behalf of Corporation of Chennai.
3. Further resolved to open an escrow account on property tax, professional tax collection and other revenues shall be escrowed favoring TUFIDCO. This account will be in existence till the time of clearing the loan and other dues of this project to TUFIDCO.
4. Further resolved that the Council of Corporation of Chennai is authorizing the Commissioner, Corporation of Chennai (authorized signatory) to make necessary budgetary provisions in Corporation of Chennai annual budget for the repayment of principal and interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.
5. Further resolved to agree to adjust by the Government of Tamil Nadu from the funds receivable for Corporation of Chennai such as the State Finance Commission, Devolution of funds, grants, share on tax due to Corporation of Chennai from the State Government, in the event of default in the repayment of principal, interest and other money due to TUFIDCO in respect of loans availed for this project.

## மன்றத் தீர்மானம் (டுபிட்கோ மாதிரிப் படிவம்)

1. எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து **ரூ.43278.00** லட்சங்களை கடனாக பெறுவதற்கு ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு இம்மாமன்றம் அங்கீகாரம் அளிக்கிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | எம்.ஐ.டி.எப். கடன் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 810.22 கி.மீ அளவு கொண்ட 5146 தார் சாலைகள் மேம்படுத்துதல் | 74866.00 | 37433.00 |
| 2 | 169.43 கி.மீ அளவு கொண்ட 796 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்துதல் | 11690.00 | 5845.00 |
| | மொத்தம் | **86556.00** | **43278.00** |

2. மேலும், சென்னை மாநகராட்சி சார்பாக டுபிட்கோ நிதி நிறுவனத்துடன் கடன் தொகைக்கான உடன்படிக்கை மற்றும் ஆவணங்கள் சென்னை மாநகராட்சி பொது முத்திரையிடுதல் ஆகிய அனைத்து நடைமுறைகளையும் இந்நிதி நிறுவனத்துடன் செயல்படுத்துவதற்கு மாமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.
3. மேலும், சொத்துவரி, தொழில்வரி மற்றும் இதர வரவினங்களுக்கு தனியே ஒரு ESCROW கணக்கு துவக்கப்பட்டு பராமரிப்பதற்கும், மேலும் இக்கணக்கு டுபிட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகை திரும்ப செலுத்தி கடன் முடிவடையும் வரை பராமரிக்க மாமன்றம் அனுமதிக்கப்படுகிறது.
4. மேலும், டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட திட்டங்களுக்கு பெறப்பட்ட கடன் தொகையினை திருப்பி செலுத்த வருடாந்திர வரவு செலவு திட்டத்தில் தேவையான ஒதுக்கீடு செய்து இக்கடன் மற்றும் வட்டித் தொகையினை மற்றும் இக்கடன் தொடர்பான நிலுவைகளை திரும்பச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க தீர்மானிக்கப்படுகிறது.
5. மேலும், இக்கடன் தொகையினை சென்னை மாநகராட்சி செலுத்தத் தவறும் பட்சத்தில் அதிகார பகிர்வு மூலம் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்படும் மாநில நிதிக்குழு மானியத்தில் நேர்செய்ய இம்மாமன்றம் அனுமதி அளிக்கிறது.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ் மாதிரி படிவங்களுக்கு) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.449/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>க.து.ந.க.எண்.பி5/2107/2014</u>**
**<u>முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 21.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.561/2014 **பொருள் எண்.17**

**<u>ரிப்பன் மாளிகையிவ் புதிய இணை அலுவலக கட்டிடத்திற்கு தளவாடங்கள் கொள்முதல் செய்ய பெறப்பட்ட மன்றத் தீர்மானத்தில் திருத்தம் செய்ய அனுமதி</u>**

மண்டலம்–5, வார்டு–58, சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் தற்போது வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம், துணை மேயர் அலுவலகம், ஆணையர் அலுவலகம், இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. ரிப்பன் மாளிகையில் பின்புறம் உள்ள பிற கட்டிடங்களில் வருவாய்த்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை, பொறியில் துறைகள், பொதுத்துறை சட்டக் குழுமம், மின்சாரத்துறை, மத்திய கணக்கு குழுமம், நிதி நிர்வாகப்பிரிவு, மழை நீர் வடிகால் துறை போன்ற துறைகள் செயல்பட்டு வருகின்றன.

தற்போது ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடம் கட்டப்பட்டு பணி முடியுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட அனைத்து துறைகளும் தற்போது ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் அனைத்து துறைகளும் இயக்கப்பட உள்ளதால் அனைத்து துறைகளுக்கும் தேவையான நவீன மேஜைகள் மற்றும் நாற்காலிகள் உள்ளிட்ட அலுவலக தளவாடங்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட டைரக்டரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்டு டிஸ்போசல்ஸ் அவர்கள் அரசு அலுவலகத்திற்கு தேவைப்படும் தளவாட பொருட்களை திருவாளர்கள்.கோத்ரெஜ் நிறுவனத்திடமிருந்து DGS&D விலையில் கொள்முதல் செய்ய தோராய திட்ட மதிப்பீடு ரூ.2,94,05,785/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

துறைத்தலைவர்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ள மேஜைகளை அப்படியே பயன்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது அலுவலர்கள் பயன்படுத்தி வரும் தளவாட பொருட்கள் இயந்திரப்பொறியியல் துறை மூலமாக ஏலம் விடப்படும். திருவாளர்கள். கோத்ரெஜ் நிறுவனம் அரசு அலுவலகங்களுக்கு தளவாட பொருட்களை DGS&D விலையில் விற்பனை செய்ய மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட டைரக்டரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்டு டிஸ்போசல்ஸ் நிறுவனம் அனுமதித்துள்ளது. மேலும் DGS&D விலையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் சென்னை மாநகராட்சிக்கு ரூ.85,00,000/- செலவு குறைவாக உள்ளது.

மேற்கண்ட தளவாடங்கள் கொள்முதல் செய்ய 30.09.2014 அன்று நடந்த மன்ற தீர்மான எண் 482/2014 மதிப்பிற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. அவ்வனுமதி பெறும் பொழுது மேற்கண்ட தளவாட பொருட்களை திருவாளர்கள். கோத்ரெஜ் நிறுவனத்திடமிருந்து DGS&D விலையில் கொள்முதல் செய்ய என குறிப்பிட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. இது குறித்து கோத்ரெஜ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விளக்கத்தில் கோத்ரெஜ் என்பது Brand Name

எனவும் Godrej Boyce Mfg. Co. Ltd., என்பது நிறுவனத்தின் பெயர் என்பதால், நிறுவனத்தின் பெயரான Godrej Boyce Mfg. Co. Ltd., என்ற பெயரில் DGS&D ஒப்புதல் பெறப்பட்ட ஆணை உள்ளது. எனவே கோத்ரெஜ் என்பதற்கு பதிலாக Godrej Boyce Mfg. Co. Ltd., நிறுவனத்திடம் DGS&D விலை கொள்முதல் செய்வதற்கு மன்ற தீர்மான எண் 482/2014 நாள் 30.09.2014ல் திருத்தம் மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 438/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.445/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/3144/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.562/2014 **பொருள் எண்.18**

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–7, வார்டு–93, முகப்பேர் கிழக்கு புல எண்.50, பிளாக் எண்.70 பாடி கிராமம் –தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான காலியாகயுள்ள 3.94 ஏக்கர் நிலத்தினை அம்மா வாரச்சந்தை மற்றும் அம்மா திரையரங்கம் அமைக்க அனுமதி.</u>**

06.09.2014 நாளிட்ட 7–வது மண்டல அலுவலரின் குறிப்பில் அம்மா வாரச்சந்தை மற்றும் அம்மா திரையரங்கம் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, வார்டு–93, முகப்பேர் கிழக்கு, புல எண்.50, பிளாக் எண்.70 பாடி கிராமம் –தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான 3.94 ஏக்கர் காலி நிலம் உள்ளதாகவும், அப்பகுதியை சுற்றி பாடி குப்பம், பாடி புது நகர், முகப்பேர் கிழக்கு, முகப்பேர் மேற்கு, கோல்டன் ஜார்ஜ் நகர், அன்னை அடுக்ககம், கோல்டன் ஜுப்ளி அடுக்ககம், திருவல்லீஸ்வரர் நகர், இளங்கோ நகர் மற்றும் குமரன் நகர் ஆகிய குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் அமைந்துள்ளதாகவும், மேலும் இப்பகுதியில் 10,000க்கு மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருவதாகவும், அவர்களுக்கு அம்மா வாரச்சந்தை மற்றும் அம்மா திரையரங்கம் அமைத்தால் அப்பகுதிவாழ் மக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தினை சென்னை மாநகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி மற்றும் நில உரிமை மாற்றம் செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

12.09.2014–ஆம் நாளிட்ட தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து–இன் குறிப்பில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம் முகப்பேர் கிழக்கு பாடி கிராமம் நகர புல எண்.50 பரப்பு 3.94 ஏக்கர்(1.59.60 எக்டர்) வகைப்பாடு ரயத்துவாரி நன்செய்(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்) என கிராம கணக்குகளில் பதிவாகியுள்ளதாகவும் இதில் அம்மா திரையரங்கம் மற்றும் வார சந்தை அமைக்க சென்னை மாநகராட்சி பெயரில் முன்னுழைவு அனுமதியும் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யுமாறும் கோரியதின் பேரில் புலதணிக்கை மேற்கொள்ளப்பட்டு தனதறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பாடி கிராமம் பிளாக் எண்.70, நகர புல எண்.50, மொத்த பரப்பு 1.59.60 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியதின் பேரில் நிலஎடுப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், நில எடுப்பு செய்யப்பட்டு நிலஎடுப்பு செய்யப்பட்ட நோக்கத்தில் பயன்படுத்தாமல் இருந்ததால் நில உரிமையாளர் நில எடுப்பு நிலத்தை திரும்ப கேட்டு நீதி மன்றத்தில் வழக்குத்தொடுத்தாதகவும் இந்த வழக்கு தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் எனவும், இதன் அடிப்படையில் இப்புலத்தில் ஒரு பகுதி உள்ள மண்மேடுகள் அகற்றும் பணி நடைப்பெற்று வருகிறது. மீதமுள்ள பகுதியில் வேலிக்கத்தான் மரங்கள் , செடிகள், டிரான்ஸ்பாம் ஒன்று, சின்டாக்ஸ் டேங்க், (சிறிய அறை) அருள்மிகு பவானி அம்மன் கோவில், பிள்ளையார் கோவில் மற்றும் திருமங்கலம் காவல் நிலைய சேவை மையம் உள்ளதாகவும். இதை தவிர பாடி குப்பம் மெயின் ரோடு ஒட்டினாற்போல் கடைகள், வீடுகள் மூலம் ஆக்கிரணம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தீர்ப்புக்கிணங்க நில உரிமையாளர் மேல்முறையீடு செய்துள்ளாரா என்பது குறித்து விசாரித்த போது பொதுமக்கள் இது குறித்து தெரியாது எனவும் தெரிவித்துள்ளார்கள். இதன் ஜக்பந்தி கீழ்கண்டவாறு உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு – டாக்டர் ஜெ.ஜெ. நகர் கிழக்கு தொழிற்பேட்டை தெரு, எம்,ஜி ஆர் நகர், பாடி புதுநகர் தெரு.

தெற்கு – அருள்மிகு வண்டியம்மன் கோவில் தெரு

கிழக்கு – பாடி குப்பம் மெயின் ரோடு.

மேற்கு – குடியிருப்புகள் மற்றும் கம்பெனிகள்.

மேற்கண்ட, ஜக்பந்தி உள்ள நிலம் குடியிருப்புகள் கட்டுவதற்காக நில எடுப்பு செய்யப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. தற்போது இப்புலம் காலியாக உள்ளதாகவும் இப்புலத்தை ஒட்டினாற்போல் முகப்பேர் கிழக்கு, மேற்கு பாடி குப்பம், புதுநகர் மற்றும் எட்டு நகர் பகுதிகள் சுற்றியுள்ளது எனவும் இப்பகுதிகளில் மாடி வீடுகள் தளம், ஓடு மற்றும் குடிசை வீடுகள் சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வசிப்பதாக விசாரணையில் தெரியவருகிறது. எனவும், மேற்படி புலத்தில் அம்மா திரையரங்கம் மற்றும் வாரசந்தை அமைக்க போதுமான இடம் உள்ளதாகவும். இப்புலத்தில் மேற்படி திட்டங்கள் மேற்க்கொள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநரிடம் அனுமதி கோரலாம் என தனி வட்டாட்சியர் புலதணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான 3.94 ஏக்கர் பாடி கிராமம் பிளாக் எண்.70, நகர புல எண்.50, மொத்த பரப்பு 1.59.60 ஹெக்டேர் நிலத்தினை மாநகர முனிசிபல் விதி 74(சி)—ன் படி குத்தகைக்கு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்பதால் தற்போது காலியாக உள்ள மேற்படி நிலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அம்மா திரையரங்கம் மற்றும் வாரசந்தை அமைக்க நடத்த இலவசமாகவோ அல்லது பெயரளவில் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ (ச,அடிக்கு ரூ.1/— வீதம்) அல்லது நில உரிமை மாற்றம் அடிப்படையிலோ தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநரிடம் ஒதுக்கீடு கோருவதற்கு நிலைக்குழு (வரிவரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.444/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்.டி6/5137/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.563/2014 பொருள் எண்.19

**தானபத்திரம்**

மனுதாரர் M/s South India Salesian Society Rep.Fr.Sagayaraj அவர்கள் மண்டலம்–6, பகுதி–16, கோட்டம்–66, கதவு எண்.9/9, பிளாட் 9, பேப்பர் மில்ஸ் சாலை, எஸ்.ஆர்.பி காலனி என்ற முகவரியில் Office Cum Residential கட்டிடம் கட்ட அனுமதி கோரி சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்படும் இடத்தை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மேம்படுத்தும் வரைப்படத்தின்படி இரண்டாம் முழுமை திட்டத்தின் வளர்ச்சி விதிமுறை 26(22)ன்படி பேப்பர் மில்ஸ் சாலை 18.00 மீ அகலப்படுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புக்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரத்தின் மூலம் திட்ட அனுமதி வழங்குவதற்கு முன்பே ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்றுள்ளது. எனவே, எஸ்.ஆர்.பி காலனி, பேப்பர் மில்ஸ் சாலை சராசரியாக 18.00மீ அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதலால் தற்பொழுது மனையை ஒட்டி அமைந்துள்ள பேப்பர் மில்ஸ் சாலையின் அகலம் 12.40 மீட்டர் ஆகும். எனவே, விண்ணப்பதாரர் மனையில் 41.60 ச.மீ பரப்பு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது. இது குறித்து மனுதாரார் M/s South India Salesian Society Rep.Fr.Sagayaraj அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதனடிப்படையில் மனுதாரர் M/s South India Salesian Society Rep.Fr.Sagayaraj அவர்கள் மண்டலம்–6, பகுதி–16, கோட்டம்–66, கதவு எண்.9/9, பிளாட் 9, பேப்பர் மில்ஸ் சாலை, எஸ்.ஆர்.பி காலனி என்ற முகவரியில் உள்ள மனுதாரர் அவர்களின் மனையில் சாலை விரிவாக்கத்திற்காக 41.60 ச.மீ. பரப்பு நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பதற்கு வேண்டி தானப்பத்திரம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் வழங்கிய தானப்பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–6 பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (தீர்மான எண்.123, நாள்.14.06.2013). மேலும் தானப்பத்திரத்தின் வரைவுக்கு சட்ட அலுவலர் அவர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

எனவே,

1. மண்டலம்–6, பகுதி–16, வார்டு–66, கதவு எண்.9/9, பிளாட் 9, பேப்பர் மில்ஸ் சாலை, எஸ்.ஆர்.பி காலனி (T.S.No.12, Block 13 of Peravallur village) என்ற முகவரியில் உள்ள மனுதாரரின் மனையில் பேப்பர் மில்ஸ் சாலை விரிவாக்கத்திற்காக 41.60 ச.மீ நிலத்தினை தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ளவும்,
2. அவ்வாறு பெறப்படும் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்த பிறகு அந்நிலத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Development Right Certificate) மனுதாரருக்கு வழங்குவதற்கும்,
3. மேற்படி இடத்தில் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகைக்கான ரூ.60,000/–(ரூபாய் அறுபது ஆயிரம் மட்டும்) மனுதாரரிடமிருந்து வசூல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண்.12/2014–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ4/57250/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.564/2014 **பொருள் எண்.20**

**சென்னை மாநகராட்சியில் நேரடி நியமனம் செய்யும் போது வயது வரம்புக்குட்பட்டு தகுதியான நபர்களை மட்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து பெற மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பொறியியல், மருத்துவம், வருவாய் மற்றும் இதர பதவிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தகுதியான நபர் பட்டியல் பெற்று நேரடி நியமனம் செய்து காலிபணியிடங்கள் நிரப்புவது தற்போது நடைமுறையில் உள்ளது.

காலிப்பணியிடங்களை நிரப்பிட இனச்சுழற்சியின் அடிப்படையில் நபர் பட்டியல் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஒவ்வொரு இனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு தெரிவித்து அதன்படி நபர் பட்டியல் அனுப்பும்படி கோரப்படுகிறது. ஆனால், இனச்சுழற்கியின் படி நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பினை கடந்த நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது. அதிலிருந்து நேர்காணல் மூலம் வயதுவரம்பை கடந்தவர்களையும் தேர்வு செய்ய வேண்டிய நிலை எழுந்துள்ளது.

சென்னை மாநகராட்சியில் பொறியியல், மருத்துவம், வருவாய் மற்றும் இதர பதவிகளில் பணி மிகவும் கடினமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பதவிகள் ஆகும். இவர்கள் களப்பணி மற்றும் அலுவலக பணி சிறப்பாக செய்வதன் மூலம் சென்னை மாநகராட்சி திட்டங்களின் பயன்கள் பொது மக்களை சென்றடையும். இப்பதவிக்கான அலுவலர்கள் இரவு பகல் பாராமல் சாலை, மருத்துவ, பூங்கா பராமரிப்பு, துப்புரவு, திடக்கழிவு மேலாண்மை, மழைநீர்வடிகால், வருவாய் வசூல், மராமத்து பணி போன்ற பணிகளை செய்ய வேண்டியுள்ளது. மேலும் மழைக்காலங்களிலும், இயற்கை பேரிடர் நிகழ்வுகளிலும், தேர்தல் களப்பணிகள் முதலியவற்றிலும் நேரம் காலம் பாராமல் துடிப்புடன் பணியாற்ற வேண்டும். எனவே இப்பதவிக்கான அலுவலர்கள் துடிப்புடன் முற்போக்கு சிந்தனையுடன் கூடிய ஆற்றல் வாய்ந்த பணியாளர்களாக தேர்ந்தெடுத்தல் மிகவும் அவசியமாகும். இதுவே சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் தற்போது சென்னை மாநகராட்சியில் வயது வரம்பு தளர்வு செய்து நேரடி நியமனம் செய்யப்பட்டு வருவதால், சென்னை மாநகராட்சியில் மேற்குறிப்பிட்ட பணி தன்மைகேற்ற அலுவலர்களை தேர்வு செய்ய இயலாத நிலை உள்ளது.

சென்னை மாநகராட்சியில் வயது வரம்பு தளர்வு செய்யாமல் பின்வரும் உச்ச வயது வரம்புக்குட்பட்ட தகுதியான பொறியாளர்களின் பெயர் பட்டியல் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக பெற்று சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் பணி நியமனம் செய்தால் சென்னை மாநகராட்சியில் பணிகள் திறம்பட நடைபெற பயனுள்ளதாக இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | OC | : | 30 Years |
| 2) | BC/MBC/DC | : | 32 Years |
| 3) | SC/ST | : | 35 Years |

இனச்சுழற்சியின் அடிப்படையில் இனவாரியாக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்புக்கு உட்பட்ட நபர்களை மட்டும் அலுவலக பணி மற்றும் களப்பணியில் ஈடுப்படுத்த சென்னை மாநகராட்சியிலும் அவ்வப்போது ஏற்படும் காலிபணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் உச்ச வயது வரம்பிற்கு உட்பட்ட நபர் பட்டியல் பெற்று நியமனம் செய்ய அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.

எனவே, சென்னை மாநகராட்சியில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் மூலமாக மட்டும் நிரப்பப்படும் நிகழ்வில் உச்ச வயது வரம்பிற்கு உட்பட்ட நபர்களை மட்டும் நியமனம் செய்வதற்கு வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து உச்ச வயது வரம்பிற்கு உட்பட்ட நபர்களின் பட்டியலை மட்டும் அனுப்ப கேட்டு கொள்ள அரசின் அனுமதி பெற நியமனக்குழு மூலமாக, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.ஏ1/2517/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.565/2014 **பொருள் எண்.21**

**<u>சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெறும் அனைத்து கட்டுமானப்பணிகளில் விபத்துகளால் உயிரிழப்பு நேர்தலை தவிர்க்க கட்டுமானப்பணிகளில் ஈடுபடும் அனைத்து ஒப்பந்ததாரர்கள், தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக காப்பீடு செய்யும் வகையில் ஒப்பவிதிகளில் கூடுதல் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த அனுமதி</u>**

25.09.2014 நாளிட்ட வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக குறிப்பில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டுமானப்பணிகள் நடைபெறும் இடங்களில் விபத்துக்கள் நேர்ந்து உயிரிழப்புகள் ஏற்படுவதால் சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்கள் கட்டப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டுமானப்பணிகளுக்கு அதை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தவறாமல் கடைபிடிக்க வலியுறுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே,

1) சென்னை மாநகராட்சியில் அனைத்துவிதமான கட்டுமான பணிகளுக்கும் பணி ஆணை பெறப்பட்ட உடன் அனைத்து ஒப்பந்ததாரர்களும் Workmen Compensation Policy (தொழிலாளர் விபத்து காப்பீடு) அல்லது Contractors All risk policy என்ற காப்பீட்டை நடைமுறைப்படுத்தி தங்களிடம் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2) மேலும், பணி ஆணை பெறப்பட்டவுடன் ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் மேற்கண்ட காப்பீட்டை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட/தனியார் காப்பீடு நிறுவனம் மூலம் காப்பீடு செய்யப்பட்டு தகுந்த ஆவணங்கள் பெறப்பட்டு, சமர்பிக்கப்பட்ட பின்னர் உடன்படிக்கை நிறைவேற்றப்படவும், கட்டுமானப்பணி நடைபெறும் இடங்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும், அதிகாரிகளும் அனைவரும் கட்டாயம் தலைகவசம் மற்றும் உரிய பாதுகாப்பு உபகரணங்களை அணிய வேண்டுமெனவும் ஒப்ப விதிகளில் கூடுதல் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

3) ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மட்டுமே அவர் ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றி பணி தொடர அனுமதிக்க வேண்டும் என்றவாறு ஒப்ப விதிகளில் கூடுதல் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தி ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது

"17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 442/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.450/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பா.து.ந.க.எண்.பி3/569/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.566/2014 **பொருள் எண்.22**

**<u>பாலங்கள் துறை – சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புதிய மேம்பாலம் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைத்தல் – தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்ட (TNSUDP) மானிய நிதியுதவியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியின் 2014–2015ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் அறிவிப்பு எண்.81 மற்றும் 82ல் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த கீழ்க்கண்ட இடங்களில் புதிய மேம்பாலம் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்க அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக கலந்தறிதற்குரியவர் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

1. வேளச்சேரி நெடுஞ்சாலை 100 அடி சாலை சந்திப்பு மற்றும் ஐந்து பர்லாங் சாலை சந்திப்பில் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்ட அடிப்படையில் மேம்பாலம் அமைக்கும் பணி. (வேளச்சேரி நீச்சல் குளம் முதல் குருஞானக் கல்லூரியை தாண்டி வேளச்சேரி பிரதான சாலை/வேளச்சேரி புறவழி சாலை வரை)
2. துர்காபாய் தேஷ்முக் சாலையில் ஆந்திர மகிளா சபா (ம) டாக்டர் ஜானகி எம்.ஜி.ஆர் கல்லூரி அருகே இயங்கும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்கும் பணி.

மேற்கண்ட மேம்பாலங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் கலந்தறிதற்குரியவரை நியமிக்க தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு (TNUIFSL) கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்வதற்குரிய விதிமுறைகளை தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) கடிதத்தின் மூலம் அனுமதி கோரப்பட்டது.

விதிமுறைகளுக்கு (TOR) சென்னை மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் கடிதத்தில் மேற்கண்ட பணிகளை தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சியின் மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே,

01) வேளச்சேரி நெடுஞ்சாலை 100 அடி சாலை சந்திப்பு மற்றும் ஐந்து பர்லாங் சாலை சந்திப்பில் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்ட அடிப்படையில் மேம்பாலம் அமைக்கும் பணி. (வேளச்சேரி நீச்சல் குளம் முதல் குருஞானக் கல்லூரியை தாண்டி வேளச்சேரி பிரதான சாலை/வேளச்சேரி புறவழி சாலை வரை)

02) துர்காபாய் தேஷ்முக் சாலையில் ஆந்திர மகிளா சபா (ம) டாக்டர் ஜானகி எம்.ஜி.ஆர் கல்லூரி அருகே இயங்கும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்கும் பணி.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள பணிகளை தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.10.2014 அன்று நடைபெறவிருந்த நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 24.10.2014 அன்று தீர்மான எண். 443/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.10.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.10.2014 அன்று தீர்மான எண்.451/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

******